# ஊழியர் சேமலாப நிதி

# உறுப்பினர்க்கான அறிவுரைகள் கைநூல்

இலங்கை மத்திய வங்கி
ஊழியர் சேமலாப நிதித் திணைக்களம்
1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 9,99,281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதி

## உறுப்பினர் அறிவுறுத்தல் - கைநூல்

இலங்கை மத்திய வங்கி
ஊழியர் சேமலாப நிதித் திணைக்களம்
1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දෙවන මුද්‍රණය 1998
இரண்டாவது பதிப்பு 1998
Second Edition 1988

මෙම පොතෙහි සිංහල සහ ඉංග්‍රීසි පරිවර්තනයන්
වෙනම මුද්‍රණය කර ඇති බව කරුණාවෙන් සලකන්න.

இந்த புத்தகத்தின் சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்புகள் வேறாக
கிடைக்கும் என்பதனை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

Please note that Sinhala and English translations of
this booklet are available.

මුද්‍රණය:
රජයේ මුද්‍රණ නීතිගත සංස්ථාව
නාවල පාර, නුගේගොඩ සහ පානළුව, පාදුක්ක.

# உள்ளடக்கம்


* மத்திய வங்கி அதிபரின் செய்தி
* தொழில் ஆணையாளர் அவர்களின் செய்தி
* சமர்ப்பணம்
* நிதியத்தில் உறுப்புரிமை எப்போது கிடைக்கும்?
* உறுப்புரிமை பெற்றுக்கொள்வதற்கு செய்யவேண்டிய தொழில் யாது?
* உதவுத்தொகை கணக்கிடும் முறை
* உமது ஊழியர் சேமலாப நிதியக் கணக்கிற்கு பாதுகாப்புக் கிடைக்கின்றதா?
* உமது கணக்கில் உள்ள தொகையினை அறிந்துகொள்வது எவ்வாறு?
* உறுப்புரிமை இலக்கம் (கணக்கிலக்கம்) என்றால் என்ன?
* "பி" சான்று அட்டையைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு?
* உறுப்பினர் கணக்குகளை ஒன்றிணைத்தல்
* "பி" சான்று அட்டை தொலைந்துவிடின் செய்யவேண்டியது என்ன?
* உறுப்புரிமைப் படிவத்தில் பெயரினை எவ்வாறு திருத்தலாம்?
* கணக்கில் உள்ள பெயரை திருத்துதல்
* உறுப்புரிமை இலக்கங்களில் தவறுகள் ஏற்படுமிடத்து உமது பணத்திற்கு உரிமையாளர் ஒருவரை நியமித்தல்
* ஊ.சே. நிதியை பிணையில் வைத்துவிட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
* தவறாகக் கொடுப்பனவு செய்த தொகையினை மீளப் பெற்றுக்கொள்ளுதல்
* உறுப்பினர் ஒருவர் மீளநலன்களைப் பெற்றுக்கொள்ளத்தக்க சந்தர்ப்பங்கள்:
  1. இளைப்பாற்று வயதினை அடையுமிடத்து
  2. பெண்கள் விவாகம் காரணமாக சேவையிலிருந்து நீங்குமிடத்து
  3. நிரந்தரமாக சுகயீனம் ஏற்படுமிடத்து
  4. வெளிநாடுகளில் வதிவதற்காகச் செல்லுமிடத்து
  5. அரசாங்க, உள்ளூராட்சிச் சேவைகளில் நிரந்தரத் தொழிலுக்குச் செல்லுமிடத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கூட்டுத்தாபனங்களை மூடுதல், மேலதிகத் தொழிலாளர்களை சேவையிலிருந்து நீக்குதல், மக்கள் மயப்படுத்துதல் அல்லது கம்பனி ஆக்குதல் ஆகிய காரணங்களின் கீழ்.

* இறந்த உறுப்பினர் ஒருவரின் மீள் நலன்களைப் பெற்றுக் கொள்ளுதல்

* வீட்டுக்கடன்களைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர்கள் மீளளிப்பினைக் கோருதல்.

* மீளளிப்பு விண்ணப்பம் செய்ததிலிருந்து அதனை வழங்குதல் வரையிலான செயன்முறைகள்.

* உமது கணக்கினை நன்றாகப் பேணுவதற்கு உதவி செய்யவும்.

* ஊழியர் சேமலாப நிதி நடவடிக்கைகளின்போது தேவைப்படும் படிவங்கள்.

# மத்திய வங்கி அதிபரின் செய்தி

உங்கள் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியின் உறுப்பினர்களான நீங்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ள பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாகவும், அது தொடர்பாக உங்களின் அறிவு, விளக்கம் என்பனவற்றை வளர்க்கும் நோக்குடனும் இந்நூலினை வெளிக்கொணர எண்ணியுள்ளோம். நீண்ட காலமாக நிலவிய குறைபாட்டினை நிவர்த்திசெய்வதற்கு இதன்மூலம் முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

ஊழியர் சேமலாப நிதியின் நிருவாகம் தொழிற்றிணைக்களத்தினாலும் நிதியத்தின் பொறுப்பு, முகாமைத்துவம் என்பன மத்திய வங்கியாலும் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த காலங்களில் நாம் பெற்றுக்கொண்ட அலுவலகங்களுக்கு இணங்க, பெரும்பாலான அங்கத்தவர்களுக்கு இந்நிதியத்தின் நடவடிக்கைகள்பற்றி தெளிவான விளக்கம் இல்லாதிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு அங்கத்தவர்களான உங்களுக்குள்ள விளக்கமில்லாமையும், உங்களுக்குரிய உரிமைகள் எவை என்பது பற்றிய போதுமான விளக்கம் அற்றிருப்பதுவுமே காரணங்களாகும். இதனால் நீங்கள் பல்வேறு கஷ்டங்களுக்கும் வசதியீனங்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியிருந்த சந்தர்ப்பங்கள் ஏராளமாகும். அத்தகைய வசதியீனங்களிலிருந்து விடுபட்டு உங்களுக்குரிய மீள்நலன்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுதலே இக்கைநூலினைப் பிரசுரிப்பதன் நோக்கமாகும்.

இம்முயற்சியின்போது தொழில் ஆணையாளர் அவர்களுடன் ஊழியர் சேமலாப நிதி அதிகாரி அவர்களும் இக்கைநூலினைப் பிரசுரிப்பதற்கு எடுத்துக்கொண்ட கூட்டுமுயற்சியினைப் பாராட்டி வரவேற்பதுடன், நாமும், எமது வங்கியின் ஊழியர் சேமலாப நிதித் திணைக்களமும், தொழிற்றிணைக்களமும், உங்களுடனும் உங்கள் தொழில்தருநர்களுடனும் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு என்றென்றும் தயார் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏ. எஸ். ஜயவர்தன
மத்திய வங்கி அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் ஆணையாளர் அவர்களின் செய்தி

அரசினைத் தவிர்ந்த துறைகளில் சேவையாற்றும் உங்களின் எதிர்கால நலனை நோக்கமாகக்கொண்டு, இலங்கை மத்திய வங்கியில் அமைந்துள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் சட்டரீதியான நடவடிக்கைகள் தொர்டர்பான சிறு விளக்கத்தினை அளிக்கும் நோக்கத்துடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

உங்களின் உழைப்பிலிருந்து கழித்தெடுக்கப்பட்ட 8% அல்லது அதற்கு மேற்பட்ட தொகையுடன், 12% அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை தொழில் வழங்குநர் கொடுத்துதவி உங்களின் பெயரில் இலங்கை மத்திய வங்கியில் உள்ள கணக்கில் வைப்பில் இடப்படும். படிப்படியாக வளர்ச்சியுறும் இந்நிதியத்தினை முதலீடு செய்வதனால் கிடைக்கும் இலாபப் பங்கு வருடாந்தத் தொடர்வட்டியாக உங்களின் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படும்.

கணக்கில் உள்ள மீதியின் 3/4 பங்கு தொகையினைப் பிணையாக வைத்து வீட்டுக் கடனைப் பெற்றுக்கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தினை அளிப்பதன்மூலம் இளைப்பாறுவதற்கு முன்பு உங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு உதவியாக உள்ளது. பெற்றுக்கொண்ட கடனின் தவணைத் தொகைகளை ஒழுங்கான முறையில் செலுத்திக் கடன் வழங்கும் நிறுவனத்தின் நம்பிக்கையினை வென்று மீண்டும் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளவும். கடன்களை மீளச் செலுத்தாது விடுவதன்மூலம் நீங்கள் உங்களின் எதிர்காலப் பாதுகாப்பினை இல்லாதொழிக்கின்றீர்கள் என்பதனை மறந்துவிட வேண்டாம்.

இளைப்பாறி, வயது முதிர்ந்து சேவையில் இருந்து நீங்கிச்செல்லும் உங்களுக்கு, உங்களின் மீளளிப்பு நலன்களை விரைவாகவும், இலகுவாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் இந்நூலில் தெளிவாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளன. நூலினை நன்றாக வாசித்து சகோதர ஊழியர்களிடையே அறிவைப் பரப்புவதற்கும், தொழில்தருநர் தமது கடமைகளை நிறைவேற்று வதற்கும் ஒத்தாசை வழங்க முடியும்.

இந்நூலினை உருவாக்குவதற்குத் தமது நேரத்தையும் சிரமத்தையும் செலவிட்ட தொழிற்றிணைக்கள ஊழியர் குழாத்திற்கும், இலங்கை மத்திய வங்கி அதிபர் அவர்களுக்கும், ஊழியர் சேமலாப நிதி கண்காணிப்பாளர் அவர்கள் உட்பட அலுவலர் குழாத்திற்கும் எனது நன்றி உரியதாகும்.

ஆர். பீ. விமலசேன
தொழில் ஆணையாளர்
ஊழியர் சேமலாப நிதி.

1997. 12. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அரசாங்க, உள்ளூராட்சிச் சேவைகளில் உள்ள நிரந்தர ஊழியர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளத் திட்டம் ஒன்று உள்ளது. எனினும், தனியார்துறை மற்றும் அரசசார்பான கூட்டுத்தாபனங்கள், சபைகள், மக்கள் மயப்படுத்தப்பெற்ற தாபனங்களில் சேவையாற்றும் உங்களைப் போன்றவர்களுக்காக அத்தகைய திட்டம் ஒன்று இல்லை. இளைப்பாறும் காலத்தில் பயன்படுத்துவதற்காக அல்லது மனைவி மக்கள் பயன்படுத்துவதற்காக நீங்கள் விரும்பிச் சேமித்துக்கொண்ட பணம் சிலவேளைகளில் இல்லாதிருக்கலாம். ஆகையால் உங்களால் தொழில் செய்யமுடியாதுள்ள காலத்தில் உங்களதும் மனைவி மக்களதும் சீவியத்திற்காக ஓரளவு பணத்தை ஒன்றுசேர்த்து வழங்குவதே ஊழியர் சேமலாப நிதியத்தின் நோக்கமாகவுள்ளது. அதற்கான எனது முயற்சிக்கு உங்களின் ஒத்துழைப்பு எமக்குத் தேவைப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியத் திட்ட முறையே இலங்கையில் உள்ள மிகப் பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இங்கே 55 இலட்சம் கணக்குகளில் ரூபா 6,600 கோடி வைப்பிலிடப்பட்டுள்ளது.

அதில் உறுப்புரிமை பெற்றுள்ள உங்களுக்கு அது தொடர்பான நடவடிக்கைகளை சரியான முறையில் நிறைவேற்றிக்கொள்வதற்கான வழிகாட்டி ஒன்று வெகுகாலமாகத் தேவைப்பட்டது. அக்குறைபாட்டினை ஓரளவுக்கேனும் நீக்கிவைத்தலே இக்கைநூல் ஆக்கப்பட்டதன் நோக்கம் எனலாம். உங்களுக்கு உண்டாகக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக இந்நூலினை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளவும். அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவும். மீண்டும் பயன்பெறு வதற்காகப் பாதுகாப்பாக வைக்கவும்.

இக் கைநூலினை ஆக்குமிடத்து தேவையான விபரங்களை வழங்கி உதவிய தொழிற்றிணைக்கள ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் பிரதித் தொழில் ஆணையாளர் திரு. என். ஏ. அத்துக்கோரள அவர்களுக்கும், உறுப்பினர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கு விடைபோல இந்நூலினை உருவாக்கித் தந்துள்ள தொழில் அலுவலர் திரு. எஸ். ஜே. திசாநாயக்கா அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக.

அவ்வாறே, இந்நூலினை அச்சுப்பதிப்பித்துத் தந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் செய்திப் பணிப்பாளர் திரு. டி. போயகொட அவர்களுக்கும், இப்பதிப்பகத்தில் கடமையாற்றும் அலுவலர் குழாத்துக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

டப்ளியு. ஏ. விஜேவர்தன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதி.

1997. 12. 15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்துவம் / உறுப்புரிமைப் பெற்றுக்கொள்வது எப்போது? எப்படி?

பின்வரும் ஏதாவது தொழில் ஒன்றில் சேர்ந்து கொள்ளும் திகதியிலிருந்து ஊழியர் சேமலாப நிதி உறுப்புரிமையை பெறுதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. அவ்வாறு உங்களை உறுப்புரிமையாளருக்கும் கட்டுப்பாடு உங்கள் தொழில் தருநருக்கு உண்டு. அது தொடர்பாக உங்கள் தொழில்தருநரைத் தூண்டும் கடமை உங்களைச் சார்ந்ததாகும்.

## உறுப்புரிமை பெறுதற்பொருட்டு எவ்வாறான தொழில் செய்தல் வேண்டும்?

இங்கு தொழிலின் தன்மை எவ்வாறாயினதாயினும், அது முக்கியத்துவம் பெறாது.

(1) நிரந்தர, நிரந்தரமற்ற பயிலுநர், தற்காலிக, சமயாசமய, நாளின் பகுதி பகுதியாக, முழு நாளுக்குக் குறைவாக வேலையில் ஈடுபடும் தொழிலாளர்.

(2) துண்டு வேலை, ஒப்பந்த வேலை, தரகு முறைவேலையின் அளவு முறைக்கேற்ப ஊதியம் பெறுவோர்.

(3) மாதாந்த, வாராந்த, நாளாந்த சம்பளம் பெறுவோர்.

(4) தொழிலாளி தரத்திலிருந்து முகாமைத்துவத் தரம் வரையான எல்லாத் தரங்களிலுமுள்ள ஊழியர்கள்.

எவ்வகை ஊழியராயினும் பணம் அல்லது வேறு வழியில் கொடுப்பனவு செய்யப்படின், ஊழியர் சேமலாப நிதி உதவுத் தொகை பெறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

## செலுத்த வேண்டிய உதவுத் தொகையை எவ்வாறு கணக்கிடுவது?

உதவுத்தொகை கணக்கிடுவதற்காக உங்களது "மொத்த உழைப்பும்" கணக்கில் எடுக்கப்படும், அதாவது:

1. சம்பளம், ஊதியம் அல்லது வேதனம்;
2. வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, விசேட வாழ்கைகைப் படி மற்றும் அதைகொத்த வேறு கொடுப்பனவுகள்;
3. விடுமுறை நாள் வேலை தொடர்பாக வழங்கப்படும் கொடுப்பனவு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வழங்கப்படும் சமைத்த/உலர் உணவுகள் பெறுமதிக்கு சமமான தொகை;

5. உணவுப்படி;

6. குறித்துரைக்கப்படும் வேறு வகையான ஊதியங்கள்.

மேற்குறித்த எல்லா வருமதிகளின் மொத்தத்தில் 8% வீதம் உங்களது சம்பளத்திலிருந்து கழித்து மொத்த வருமதியின் 12% வீதத்திற்குச் சமமான தொகையை தொழில்தருநர் சேர்த்து, மொத்தமாக 20% வீதத்தை ஊழியர் சேமலாப நிதிக்குச் செலுத்தப் உங்களது தொழில்தருநர் கடப்பாடுடையவராவார். உங்களது மொத்த வருமதியில் 8% வீதத்தைக் கழித்துக்கொள்ள உங்கள் தொழில்தருநருக்கு உரிமையுண்டு. 12% தொகையைக் கழிக்க அவருக்கு உரிமை இல்லை. அத்தொகை அவராற் செலுத்தப்படல் வேண்டும்.

உதாரணம்:

உங்களது மொத்த மாதச் சம்பளம், ஊதியம் அல்லது மொத்த வருமதி ரூபா 2,500 எனின் உங்கள் சம்பளத்தில் கழிக்கப்பட வேண்டிய தொகை ரூபா 2,500 / 8% ரூபா 200 ஆகும்.---

அத்துடன் சேர்க்க வேண்டிய தொகை ரூபா 2,500/ 12 % ரூபா 300 ஆகும். இதன்படி உங்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதிக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 500 ஆகும். (இது உங்களது மொத்த உழைப்பில் 20% க்குச் சமமானதாகும்.)

### உங்களது உதவுத்தொகைக்குப் பாதுகாப்பு உள்ளதா? வட்டி கிடைக்கின்றதா?

ஆம். உங்களது உதவுத்தொகை அரசாங்க வங்கியான இலங்கை மத்திய வங்கியில் வைப்பீடு செய்யப்படுகின்றது. ஆகவே அதற்கு அரசாங்கப் பாதுகாப்பு உண்டு. அப்பணத்தை அரசாங்கம் அரசாங்க பிணை முறிகளிலும் திறைசேரி உண்டியல் பத்திரங்களிலும் முதலீடு செய்கின்றது. அவற்றினூடாகக் கிடைக்கும் வருமானத்தில் வருமான வரி செலுத்திய பின் எஞ்சிய தொகை நிருவாகச் செலவுகளுக்காகச் செலவிடப்படுவதோடு மிகுதித் தொகை உறுப்பினர்களின் வைப்பீட்டிற்கு வட்டியாகப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. அது உங்களது முதலீட்டிற்கு கிடைக்கும் தொடர் வட்டியாகும். உங்களது தொகையை மீள எடுக்கும் வரை அத்தொகைக்கு வட்டி கிடைப்பதை உறுதி செய்யும் சட்ட ஏற்பாடுகள் ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## உங்களது கணக்கில் வரவிலிடப்பட்டுள்ள தொகை தொடர்பான விபரங்களைப் பெறுவது எப்படி?

உங்களது உறுப்புரிமை இலக்கத்தையே இலங்கை மத்திய வங்கி உங்களது கணக்கின் எண்ணாகக் கொள்ளும். அவ்விலக்கத்தின் கீழ் கணக்கு அறிக்கை ஒன்றை வருடாந்தம் உங்கள் தொழில்தருநருக்கு அது அனுப்பி வைக்கும். உதவுத் தொகை செலுத்துகை முடிவுறும் வருடம் வரை எவ்வாறு கணக்கு அறிக்கை அனுப்பப்படும். எனவே, அதை உங்கள் தொழில்தருநரிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.

இன்றேல், உங்களது முழுப்பெயர், முகவரி, உறுப்புரிமை எண் அல்லது எண்கள் என்ற விபரங்களைக் குறிப்பிட்டு:

| | | |
|---|---|---|
| அதிகாரி,<br>ஊழியர் சேமலாப நிதி,<br>இலங்கை மத்திய வங்கி,<br>இல. 41, ரேணுகா கட்டிடம்,<br>ஜனாதிபதி மாவத்தை,<br>கொழும்பு 1. | அல்லது | அதிகாரி,<br>ஊழியர் சேமலாப நிதி,<br>த. பெ. எண்: 1299,<br>இலங்கை மத்திய வங்கி,<br>கொழும்பு 1. |

என்ற முகவரிக்கு எழுத்து மூலமாக எழுதிக் கேட்பதன் மூலம் உங்கள் கணக்கில் உள்ள வரவுத்தொகை பற்றிய விபரத்தை அறிந்துகொள்ளலாம்.

கணக்கறிக்கை பிழையானது என நீங்கள் கருதினால், உங்களது தொழில் தாபனம் அமைந்துள்ள பிரதேசத்தில் தொழில் அலுவலகத்திலுள்ள உதவித் தொழில் ஆணையாளருக்கோ, அல்லது தொழில் உத்தியோகத்தருக்கோ முறைப்பாடு செய்யுங்கள்.

## உறுப்புரிமை எண் என்பது எது?

ஊழியர் சேமலாப நிதியத்தில் உங்களது தொழில்தருநர் பதிவுசெய்யப்படுமிடத்து அவருக்கு ஆங்கில அட்சர எழுத்தொன்றைப் பின்தாங்கிய எண் ஒன்று வழங்கப்படும். அந்த ஆங்கில எழுத்து தாபனம் அமைந்துள்ள மாவட்டத்தைக் குறிக்கும். தற்போது இரு ஆங்கில எழுத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**அது பின்வருமாறு அமைந்ததொன்றாகவிருக்கலாம். அதாவது – 45118/D என்றவாறு:**

உங்களை ஒரு உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளும்போது உங்கள் தொழில்தருநர் உங்களுக்கென ஒரு எண்ணை ஒதுக்கீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் வேண்டும். ஊழியர்கள் சேரும் முறைப்படி 1, 2, 3 என்றவாறு எண் குறித்தொதுக்கப்படும். உங்களுக்கு அவ்வாறு கொடுக்கப்பட்ட எண் 3 ஆயின் உங்களது உறுப்புரிமை எண் பின்வருமாறு அதாவது உங்கள் தொழில்தருநரது பதிவு செய்யப்பட்ட எண்ணும் தொழில்தருநர் உங்களுக்குக் கொடுத்த எண்ணுமாக இரண்டும் ஒன்றாகச் சேர்க்குமிடத்து அமையும். அதாவது, 45118/D/3 ஆக அமையும். இதன் பின் சேவையில் சேரும் ஊழியருக்காக உறுப்புரிமை எண் 45118/D/4 ஆகவும், அடுத்த எண்ணாக 45118/D/5 ஆகவும் உறுப்புரிமை இலக்கங்கள் தொடராக அமையும்.

## 'பீ' உறுப்புரிமை அட்டையினைப் பெற்றுக்கொள்வது எப்படி?

நீங்கள் தொழிலில் அமர்ந்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் ஏ.பீ.எச். (A.B.H.) என்ற படிவங்களைப் பூர்த்திசெய்து தாபனம் அமைந்துள்ள பிரதேசத்தின் தொழில் அலுவலகத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு உங்கள் தொழில்தருநர் கடமைப்பட்டுள்ளார். அவ்வாறு அவர் செய்யாவிடின் அது குறித்து அவருக்கு ஞாபகமூட்டலாம். தொழில் அலுவலகத்தில் இப்படிவங்கள் சரி, பிழை பார்க்கப்பட்டு 'பீ' படிவத்தில் பிரதித் தொழில் ஆணையாளரின் (ஊ.சே.நி.) மேலொப்பம் இடப்பட்டுச் சான்றுப்படுத்திய பின்பு தங்களுக்கு வழங்கப்படுவதற்காக தங்களது தொழில்தருநருக்கு அனுப்பி வைக்கப்படும். அது உங்களது உறுப்புரிமைப் பத்திரமாகும். அதை கவனமாகப் பாதுகாத்து வைத்துக்கொள்வதன் மூலம் சேமலாப நிதி தொடர்பான விடயங்களை இலகுவில் செய்துகொள்ளக்கூடியதாக இருக்கும். ஏ.பீ.எச். என்ற படிவங்களில் தெளிவாகப் பெருவிரல் அடையாளங்களைப் பதிப்பதும் பிழையின்றி படிவத்தில் விபரங்களைப் பூர்த்தி செய்வதும் மீளளிப்பை வழங்கும்போது இலகுவாகவிருக்கும்.

## ஒரு தொழிலில் இருந்து இன்னொரு தொழிலுக்குச் செல்லும்போது இன்னோர் 'பீ' பத்திரம் பெறுதல் அவசியமா?

இல்லை. உங்களது புதிய தொழில்தருநரிடம் முன்னைய தாபனத்தில் பெற்ற 'பீ' படிவத்தைக் கொடுத்து 'ஜி' என்னும் மற்றுமோர் படிவத்தைப் பூர்த்தி செய்ய உதவுங்கள். அந்த 'பீ' பத்திரமும் 'ஜி' படிவமும் புதிய தாபனம் அமைந்துள்ள பிரதேச

தொழில் அலுவலகத்திற்கு உங்களது புதிய தொழில்தருநரால் அனுப்பப்படும். தொழில் அலுவலகத்தில் அது தொடர்பான மாற்றங்களைச் செய்து புதிய இலக்கமிடப்பட்ட 'பீ' பத்திரம்; மீண்டும் தொழில்தருநருக்குத் திருப்பி அனுப்பப்படும். இவ்வாறன்றி 'பீ' பத்திரத்தில் நீங்களோ உங்கள் தொழில் தருநரோ ஏதாவது திருத்தம் செய்தால் அப்பத்திரம் செல்லுபடியற்றதாவதற்குக் காரணமாக அமையலாம்.

## 'பீ' பத்திரம் தொலைந்துவிட்டால் யாது செய்தல் வேண்டும்?

'பீ' பத்திரம் தொலைந்து விடுமிடத்து செலுத்தும் தபால் அலுவலகம் 'கொழும்பு' எனக்குறிப்பிட்டு தொழில் ஆணையாளர் பெயருக்கு ஒரு ரூபா (1/-) காசுக் கட்டளை ஒன்றைப் பெற்று 'பீ' படிவம் ஒன்றையும் நிரப்பி பக்கத்தில் குறிப்பிட்டுள்ள பிரதித் தொழில் ஆணையாளரின் (ஊ. சே. நி.) முகவரிக்கு அனுப்புங்கள்.

## 'பீ' பத்திரத்தில் பெயர் தவறாயின் அதனை திருத்திக் கொள்வது எவ்வாறு?

இதற்கு பின்வரும் ஆவணங்கள் சான்றிதழ்கள் தேவைப்படும்.

01. 'பீ' பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பெயரையும் உங்களது சரியான பெயரையும் குறிப்பிட்டு அவ்விரு பெயர்களிலும் குறிப்பிடப்படுபவர் உறுப்புரிமை இல .......... உடைய நீங்கள் எனவும் அவ்விரு பெயர்களாலும் குறிப்பிடப்படும் நபர் நீங்கள்தான் என்றும் அப்பெயர்களால் குறிப்பிடப்படும் வேறு நபர்கள் எவரும் இல்லை எனவும் உறுதிப்படுத்தும் தொழில்தருநரிடம் பெற்ற கடிதம்.

02. உங்களது பிறப்புச் சான்றிதழ் அல்லது திருமணப் பதிவுச் சான்றிதழ். திருமணத்தின் பின் பெயர் மாற்றம் ஏற்படின் பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக திருமணப் பதிப்புச் சான்றிதழை அனுப்புதல் வேண்டும். இச்சான்றிதழ்களை வழங்கிய தாபனத்தின் / திணைக்களத்தின் தற்போதைய அதிகாரியினால் அச்சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

03. தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி (கிராம உத்தியோகத்தரினால் அது உங்களுடையது என உறுதிப்படுத்தப்பட்டு பிரதேசச் செயலாளரினால் மேல் ஒப்பம் இடப்பட்டிருத்தல் அவசியம்)

04. 'பீ' பத்திரம்

மேற்கூறிய ஆவணங்களுடன் உங்களது பெயர் எவ்வாறு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற விண்ணப்பத்துடன் உங்கள் தாபனம் அமைந்துள்ள பிரதேசத்தின் தொழில் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். தொழில் அலுவலகத்தில் பாதுகாக்கப்படும் உங்கள் ஏ.எச். பத்திரங்களிலும் 'பீ' பத்திரங்களிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பின்பு 'பீ' பத்திரம் உங்கள் தொழில் தருநருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

## இலங்கை மத்திய வங்கியிலுள்ள பெயர் 'பீ' பத்திரத்திலுள்ள பெயரோடு ஒத்திராதிருக்குமிடத்து என்ன செய்தல் வேண்டும்? அதைத் தெரிந்துகொள்வது எவ்வாறு?

'பீ' பத்திரத்தில் உள்ள பெயர் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் வருடாந்த கணக்கு அறிக்கையிற் காணப்படும் பெயருடன் ஒத்து வருகிறதா எனப்பாருங்கள். அப்போது பெயர் பிழையா சரியா எனத் தெரியவரும். பெயர் மாறுபட்டிருந்தால் அதை திருத்திக்கொள்வதற்கு பின்வரும் நடைமுறையைக் கையாளுதல் வேண்டும்.

மத்திய வங்கி அறிக்கையிற் காணப்படும் பெயர் பிழையாயின் உங்களது பிழையான பெயரையும் அது எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு அவ்விரு பெயர்களாலும் குறிப்பிடப்படும் அங்கத்தவர் இல....... உடைய ஒரே நபர் நீங்கள்தான் என உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றை உங்கள் தொழில் தருநரிடமிருந்து பெற்று உங்கள் விண்ணப்பக் கடிதத்தையும் இணைத்து அதிகாரி, ஊழியர் சேமலாப நிதி, இலங்கை மத்திய வங்கி, இல. 64, பிரதான வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்புங்கள். இக்கடிதத்தின் பிரதியை உங்கள் தாபனம் அமைந்துள்ள பிரதேசத்தின் தொழில் அலுவலகத்திற்கும் அனுப்புங்கள்.

## உறுப்புரிமை இலக்கம் பிழையாயின் யாது செய்தல் வேண்டும்?

உங்கள் தொழில் தருநரிடம் அதுபற்றி எடுத்துக்கூறி சரியான உறுப்புரிமை எண்ணைக் குறிப்பிடும்படி வலியுறுத்துங்கள். அது பயனளிக்காவிடின் உங்கள் பிரதேச தொழில் அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் ஊழியர் சேமலாப நிதிக் கணக்கிற்கு உரிமையாளர் ஒருவரை நியமிக்க முடியுமா?

ஆம். சேமலாப நிதியில் சேரும்போதே அதனைச் செய்யலாம். ஏ. பீ. படிவங்களுடன் எச். என்ற படிவத்தையும் நிரப்பிக் கொடுங்கள். அங்கே உரித்தாளி ஒருவரையோ பலரையோ நியமனம் செய்யலாம். படிவத்தை நிரப்பும்போது அவர்களுக்குரிய மீளளிப்பு நன்மையின் பங்கையும் குறிப்பிடுதல் வேண்டும். திருமணமாகாத ஒருவர் யாரையும் தனது உரித்தாளியாக நியமிக்கலாம். ஆயினும், திருமணமான ஒருவர் தனது மனைவி/ கணவர், பிள்ளைகள், பெற்றோர், சகோதர / சகோதரிகள் போன்றவர்களை நியமிக்கலாம். அதேபோன்று ஒருவர் முன்பு செய்த நியமனம் ஒன்றை எந்நேரத்திலும் விலக்கிக் கொள்ளலாம். 'ஐ' என்றி படிவத்தை இதற்காகப் பாவித்தல் வேண்டும். புதிய நியமனம் ஒன்று மீண்டும் செய்வதனால் 'ஜே' என்ற படிவத்தை நிரப்பி உங்கள் பிரதேச தொழில் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். திருமணத்திற்கு முன்பு செய்யப்பட்ட நியமனமானது திருமணத்தின் பின் செயலிழந்துவிடும். மேலும் நியமனம் செய்யப்பட்ட நபர் இறந்தால் அவருக்கிருக்கும் உரிமையும் வலுவிழந்துவிடும். பராயமடைந்த சிறுவர் / சிறுமியரை நியமனம் செய்யும்போது பாதுகாவலர் ஒருவரையும் நியமிக்கலாம். மீளளிப்பு நன்மைகளை பாதுகாவலருக்கு வழங்கலாம். பராயமடையாத சிறுவர் / சிறுமியர் உரிய வயதையடையும்போது பாதுகாவலர் நியமனம் தானாகவே வலுவிழந்துவிடும்.

உரித்தாளர் நியமனம் செய்யாத உறுப்பினர் ஒருவரின் ஊழியர் சேமலாப நிதி, உரிமைச் சாசன சட்ட விதிகளுக்கமைவாய் நீதிமன்றம் ஒன்றினால் கட்டளையிடப்படும் உரித்தாளர்களுக்கு வழங்கப்படும்.

## ஊழியர் சேமலாப நிதியை ஈடாக வைத்து வீட்டாதனக் கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமா?

ஆம்.

1. வீடொன்றை நிருமாணிப்பதற்கு,
2. வீடு / காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு,
3. வதியும் வீட்டைத் திருத்துவதற்கு.

போன்ற காரணங்களுக்காக உங்கள் ஊழியர் சேமலாப நிதியை ஈடாக வைத்து அத்தொகையில் 3/4 பங்கை (அல்லது

75% வீதத்தை) அனுமதிக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடனாகப் பெறலாம். அதற்கான விண்ணப்பப்படிவங்களை அருகில் உள்ள தொழில் அலுவலகத்தில் பெற்று அவற்றைச் சரியாக நிரப்பி, கோரப்படும் ஆவணங்களுடன் நீங்கள் வீட்டை நிருமாணிக்கும் அல்லது காணியாயின் அது அமையும் அல்லது திருத்தம் செய்யும் வீடாயின் அது அமைந்துள்ள பிரதேசத்தின் தொழில் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். மத்திய வங்கியில் உங்கள் ஊழியர் சேமலாப நிதியில் உள்ள தொகை எவ்வளவு என்பதை அந்த தொழில் அலுவலகம் கோரிப் பெற்றுக்கொள்ளும். அவ்வாறான தொகையில் 75% வீதத்தையோ அல்லது நீங்கள் விண்ணப்பிக்கும் தொகையையோ இதில் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகையைக் கடனாக வழங்கும்படி நீங்கள் கடன்பெற விரும்பும் வங்கிக்கு தொழில் அலுவலகம் விதந்துரைக்கும்.

## தவறுதலாகச் செலுத்தப்பட்ட தொகையை எவ்வாறு மீளப்பெறலாம்?

தாபனம் அமைந்துள்ள பிரதேசத்தின் தொழில் அலுவலகத்தினூடாக ஊழியர் சேமலாப நிதி அதிகாரிக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பும்படி உங்கள் தொழில் தருநருக்கு ஞாபக மூட்டுங்கள். தவறுதலாகச் செலுத்தப்பட்ட தொகையைச் செலுத்திய தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் இந்த விண்ணப்பம் அனுப்பப்படுதல் வேண்டும்.

## ஊழியர் சேமலாப நிதியிலிருந்து மீளளிப்பு நன்மைகளைப் பெறுவது எவ்வாறு?

மீளளிப்பு நன்மைகளைப் பெற உரிமையுள்ள ஒருவர் தொழில் அலுவலகமொன்றில் 'கே' படிவத்தைப் பெற்றுச் சரியாக பூர்த்திசெய்து அதன் 11 ஆம் பகுதியை தொழில் தருநரிடம் கொடுத்துப் பூர்த்திசெய்து 'பீ' பத்திரத்துடன் பின் காணும் பத்திரங்களையும் இணைத்து அதைத் தொழில் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நீங்கள் இறுதியாக தொழில் புரிந்த தாபனம் மூடப்பட்டிருந்தால் தனிநபர் விபரப்படிவம் ஒன்றைப் (அண்மையிலுள்ள தொழில் அலுவலகத்தில்) பெற்று அதை நிரப்பி கிராம உத்தியோகத்தரினதும் பிரதேச செயலாளரினதும் உறுதிப்படுத்தலைப் பெற்று விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புங்கள். விண்ணப்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு இணைக்கப்பட்டுள்ள தபால் அட்டையில் பெயர், முகவரி எழுதியனுப்பத் தவறாதீர்கள். அது உங்களுக்கு உடனடியாக பதிலைப் பெற்றுத்தரும்.

## எந்தெந்த சந்தர்ப்பங்களில் ஒருவர் மீளளிப்பு நன்மைகளைப் பெற உரித்துடையவராகிறார்?

01. ஓய்வு அடையும் வயதை எய்தி, சேவையிலிருந்து விலகும்போது:

ஆண்களாயின் 55 வயதையும் பெண்களாயின் 50 வயதையும் பூர்த்திசெய்து சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின் மீளளிப்பு நன்மைகளைப் பெற உரித்துடையவராவார். அவ்வாறானவர்கள் 'கே' படிவத்தைச் சரியாகப் பூர்த்திசெய்து 'பீ' உறுப்புரிமைச் சான்றுப் பத்திரத்தையும், பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியையும் அதன் நிழற்படப் பிரதி ஒன்றினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். நிழற்படப் பிரதி மூலப்பிரதியின் உண்மையான நகல் என்பதை விண்ணப்பதாரி தனது கையெழுத்தில் உறுதிப்படுத்த வேண்டும். பிரதி பின்பு திருப்பி அனுப்பப்படும்.

02. திருமணம் காரணமாக தொழிலிலிருந்து விலகும்போது:

பின்வரும் ஏதாவதொரு வகையில் தொழிலிலிருந்து விலகும் பெண்கள் இக்காரணத்தின் கீழ் மீளளிப்பு நன்மைகளைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

1. தொழிலிலிருந்து விலகி 3 மாதங்கள் கழிவதற்கு முன் திருமணமானால், அல்லது
2. திருமணம் முடிந்து ஐந்து வருடங்கள் முடிவடைவதற்கு முன் சேவையிலிருந்து விலகியிருந்தால் அவ்வாறான பெண்கள் இதன்கீழ் மீளளிப்பு நன்மைகளைப் பெறத் தகுதியுடையவராவார். இவ்வாறான விடயத்தில் 'கே' படிவத்தைச் சரியாகப் பூர்த்திசெய்து பின்வரும் ஆவணங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

அ. திருமணத்தைப் பதிவுசெய்த விவாகப்பதிவாளரினால் உண்மைப் பிரதி எனச் சான்றுரைக்கப்பட்ட திருமணப் பதிவுச் சான்றிதழின் நிழற்படப் பிரதி.

ஆ. திருமணம் நடைபெற்றதென உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு, பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட அத்தாட்சிக் கடிதம்.

இ. 'பீ' பத்திரம்.

03. நிரந்தரமான சுகயீனம் காரணமாக சேவையிலிருந்து விலகும்போது:

தொடர்ந்தும் சேவையில் இருக்க முடியாதவர் என அரசாங்க வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி ஒருவரினால் வழங்கப்படும் "சுகாதாரம் 307" படிவத்தின் சான்றிதழைப் பெற்று தொழில் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் 'எம்' படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அங்கே 'எம்' படிவத்தோடு உரிய அனைத்து விபரங்களும் உங்களுக்கு வழங்கப்படும்.

04. நிரந்தரமாக வதியும் பொருட்டு வெளிநாடொன்றுக்கு விசா பெற்றுச் செல்லும்போது:

அ. நிரந்தர வதிவிட விசாப்பத்திரத்தோடு அதன் நிழற்படப் பிரதி.

ஆ. பாஸ்போர்ட் மூலப் பிரதியும், நிழற்படப் பிரதி ஒன்றும் இணைக்கப்பட்டு 'கே', 'பீ' பத்திரங்களையும் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

05. அரசாங்க - உள்ளூராட்சி மன்றங்களில் தொழில் பெற்றுச் செல்லும்போது:

அரசாங்க உள்ளூராட்சி மன்றங்களில் இளைப்பாற்றுச் சம்பளத்துடன் கூடிய நிரந்தர சேவையில் சேரும் ஒருவர் மீளளிப்பு நன்மைகளைப் பெற 'பீ' பத்திரங்களோடு நியமனக் கடிதத்தின் மூலப் பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். மூலப் பிரதி திருப்பி அனுப்பப்படும். நிழற்படப் பிரதி உண்மையான பிரதி என்பதை விண்ணப்பதாரி தன் கையெழுத்தில் எழுதிச் சான்றுரைக்க வேண்டும்.

மேலும் தற்போது சேவையிலுள்ள திணைக்கள தலைவரிடம் தற்போதைய தொழிலின் தன்மைபற்றி விபரமாக சான்றிதழ் ஒன்றையும் பெற்று அனுப்புதல் வேண்டும்.

06. கூட்டுத்தாபனம் மூடப்படுதல், மேலதிக ஊழியர்களை விலக்குதல், மக்கள்மயப்படுத்தல், கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியாக மாற்றப்பட்டவிடத்து தொழில் முடிவுறுதல் / விலகுதல் போன்ற சந்தர்ப்பங்கள்:

1. அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நிறுவனம் ஒன்று அல்லது கூட்டுத்தாபனம் ஒன்று பொதுக் கம்பனியாக மாற்றப்படுதல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் மேலதிக ஊழியர்களை விலக்குதல்;
3. அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்க வர்த்தக நிறுவனமொன்றை மூடிவிடுதல்;

போன்ற சந்தர்ப்பங்களில் சேவையிலிருந்து விலகிச் செல்லும் ஊழியர்கள் அவ்வாறான காரணங்களை விளக்கிக் கடிதமொன்றை உரிய அதிகாரி அல்லது ஆளணி முகாமையாளரிடம் பெற்று அவர் ஊடாக 'கே', 'பீ' படிவங்களுடன் அக்கடிதத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**இறந்த அங்கத்தவரொருவரின் மீளளிப்பு நன்மைகளை எவ்வாறு பெறுவது?**

இறந்த உறுப்பினர் முறையான ஒருவரை நியமித்திருந்தால் அவருக்குக் குறிப்பிட்ட பங்குத் தொகை செலுத்தப்படும். அவ்வாறு முறையான நியமனம் ஒன்று செய்திராதவிடத்து உரிமைச் சாசன சட்ட விதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும் உரித்தாளர் / உரித்தாளர்களுக்கு செலுத்தப்படும்.

அவ்வாறு உரிமை கோருவோர் 'எல்' படிவத்தைப் பூர்த்திசெய்து அத்துடன் பின்வரும் ஆவணங்களையும் இணைத்து தொழில் ஆணையாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

1. இறந்த உறுப்பினரின் மரணச் சான்றிதழ்.
2. மனைவி விண்ணப்பிப்பதானால் திருமணப் பதிவுச் சான்றிதழ்.
3. பிள்ளைகள் இருப்பின் அவர்களது பிறப்புச் சான்றிதழ்கள்.
4. பெற்றோர் விண்ணப்பித்தால் இறந்த உறுப்பினரின் பிறப்புச் சான்றிதழ்.
5. பராயமடையாதோர் விடயத்தில் பாதுகாவல் பற்றிச் சான்றிதழ் (அவர்களின் பெயர், வயது) பாதுகாவலரின் பெயர் போன்ற விபரங்கள் கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலாளர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் தொழில் ஆணையாளருக்கு முகவரியிடப்படுதல் வேண்டும்.
6. இதைவிட தனிநபர் விபரம் அடங்கிய சான்றிதழையும் கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தல்

வேண்டும். இதுவும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

வீடமைப்புக் கடன் பெற்ற உறுப்பினர் ஒருவர் மீளளிப்பு நன்மைகளை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை பின்வருமாறு செயல்படுதல்: -

1. வீடமைப்புக் கடன் ஒன்றிற்காக விண்ணப்பித்தும் கடனைப் பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில்;

   கடன் வழங்கும் நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தற்பொருட்டு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மீதித் தொகைச் சான்றிதழின் பிரதியையும் இரண்டாம் பிரதியையும் (ஊ.சே.நி. 2 படிவம்) வெள்ளை-/ இளஞ் சிவப்பு நிற பிரதிகள்) 'கே' விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புங்கள்.

2. வழங்கப்பட்ட வீடமைப்புக் கடனை முற்றாகத் திருப்பிச் செலுத்தியுள்ளவிடத்து, மீளளிப்பு நன்மைபெற விண்ணப்பிப்பவர் 'கே' விண்ணப்பப்படிவத்துடன் "ஊ.சே.நி. வீடமைப்புக்கடன் 14" படிவத்தையும் நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

3. பெற்றுக்கொண்ட வீடமைப்புக் கடன் தொகையில் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை இருப்பின் "ஊ.சே.நி. வீடமைப்புக் கடன் 14" படிவத்தை நாலு (4) பிரதிகளில் நிரப்பி கடன் வழங்கிய நிறுவனத்தினதும் உதவித் தொழில் ஆணையாளரினதும் உறுதிப்படுத்தலையும் பெற்று 'கே' படிவத்துடன் மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும். இங்கு தாமதத்தை தவிர்த்தற்பொருட்டு கடன் வழங்கிய வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றை அல்லது சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து 'கே' படிவத்தில் இக்கணக்கின் எண்ணையும் வங்கிக் கிளையின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**மீளளிப்பு நன்மைக்கான விண்ணப்பத்தை அனுப்பியதன் பின்பு மீளளிப்பு நன்மை (பணம்) உங்களுக்குக் கிடைக்கும் வரையான நடைமுறைகள் எவை என்பதை அறிவீர்களா?**

உங்களது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையா என தொழில் ஆணையாளர் அவரிடமுள்ள ஆவணங்களுடன் செவ்வை பார்ப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பத்தில் காணப்படும் விபரங்கள், தன்வசமுள்ள விபரங்களுடன் பொருந்தாவிட்டால் அவ்வாறு காணப்படும் தவறுகளைக் குறிப்பிடும் கடிதம் ஒன்றுடன் விண்ணப்பத்தைத் திருப்பி உங்களுக்கு அனுப்புவார்.

விண்ணப்பத்தில் காணப்படும் விபரங்கள் அனைத்தும் பொருத்தமாகவும் சரியாகவும் இருப்பின் மீளளிப்பு நன்மைகளைச் செலுத்தும்படி மத்திய வங்கிக்கு "முடிபுக் கடிதம்" ஒன்றைத் தொழில் ஆணையாளர் அனுப்புவார். அதன் பிரதி ஒன்று விண்ணப்பதாரிக்கும் அனுப்பப்படும். அம் முடிபுக்கடிதத்தில் காணப்படும் தகவல்கள் மத்திய வங்கியினால் சரிபார்க்கப்பட்டு அவை மத்திய வங்கியிலுள்ள விபரங்களுடன் பொருந்திவரின் மீளளிப்பு நன்மைகளைச் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

மத்திய வங்கியிலுள்ள விபரங்களுடன் முடிபுக் கடிதத்தில் காணப்படும் விபரங்கள் ஒத்துவராதவிடத்து அது குறித்து உங்களுக்கோர் பிரதியுடன் தொழில் ஆணையாளருக்கு அறிவிக்கப்படும். தொழில் ஆணையாளர் அது குறித்து உங்களுக்குத் தெரிவித்து பிழைகளைக் குறைபாடுகளைத் திருத்தி அனுப்புமாறு கோருவார். அதன்படி உரிய திருத்தங்களைச் செய்து அனுப்புவீர்களாயின் மீளளிப்பு நன்மைகளை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள ஏதுவாயிருக்கும்.

## மீளளிப்பு நன்மைகள் தொடர்பான பொது அறிவுறுத்தல்கள்:

1. மத்திய வங்கியின் ஆவணங்களில் காணப்படும் உங்கள் பெயர் உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவத்திலுள்ள பெயருடன் ஒத்துவராவிடத்து, அவ்விரு பெயர்களாலும் குறிப்பிடப்படும் நபர் நீங்கள் தான் என உறுதிசெய்து சான்றிதழ் ஒன்றை உங்கள் தொழில் தருநரிடம் பெற்று அனுப்பிவையுங்கள். அப்போது தொழில் ஆணையாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் கோவை இலக்கத்தைக் குறிப்பிட மறவாதீர்கள். இப்பெயர் மாறுபாடு தொடர்பாக சத்தியக் கடிதம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. ஒரே உறுப்புரிமை எண்ணின் கீழ் இருவருக்குப் பணம் அனுப்பப்பட்டிருப்பின் அவ்விருவருக்கும் அனுப்பப்பட்ட தொகை பற்றிய முழு விபரம் அடங்கிய பட்டியல் ஒன்றை (வருடம், மாதம், தொகை என்பவற்றைக் குறிப்பிட்டு) தொழில் தருநரிடமிருந்து பெற்று தொழில் ஆணையாளரின் கோவை எண்ணையும் குறிப்பிட்டுத் தொழில் ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

3. விண்ணப்பத்தை அனுப்பி, கிடைத்தது பற்றிய தபாலட்டையைப் பெற்ற 4 வாரங்களுக்கு எதுவித நினைவூட்டல்களும் அவசியமற்றதாகும். அதன் பின் தேவைப்படின் தொழில் ஆணையாளரின் கோவை இலக்கத்தைக் குறிப்பிட்டு நினைவூட்டற் கடிதத்தை அனுப்பலாம்.

4. திருமணச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், நியமனக் கடிதம், இறப்புப் பதிவுப்பத்திரம் போன்றவை நுணுக்கமாகப் பரிசீலிக்கப்படும். போலி ஆவணங்களை சமர்ப்பிப்போர் குற்றத்தடுப்பியல் பகுதிக்கு பாரப்படுத்தப்பட்டு குற்றவாளியாக காணப்படின் தண்டனைக்குள்ளாகலாம்.

தண்டனை:

500 ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் ஒரு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது இவ்விரண்டும்.

## இலங்கை மத்திய வங்கியில் நடைமுறைப்படுத்தப்படும் உங்கள் ஊழியர் சேமலாப நிதிக் கணக்கை ஒழுங்காகப் பேணிவருவதற்கு நீங்கள் (உறுப்பினர்கள்) செய்ய வேண்டியவை யாவை?

அதற்காக:

* உங்கள் சரியான பெயரை (முதல் எழுத்துக்களுடன்) தொழில் தருநருக்கு அறிவியுங்கள். (தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)
* உங்களது தேசிய அடையாள அட்டை எண்ணைச் சரியாக குறிப்பிடுங்கள்.
* உங்களது உறுப்புரிமைப் பத்திரத்தில் ('பீ' பத்திரம்) பெயர் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாவென பார்த்துக் கொள்ளுங்கள்.
* மத்திய வங்கியினால் வருடாந்தம் அனுப்பப்படும் கணக்கு அறிக்கையில் காணப்படும் உறுப்புரிமை எண், பெயர், மீதித்தொகை என்பன சரியா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
* மீளளிப்பு நன்மைகளைக் கோருமிடத்தோ, வீடமைப்புக் கடன் விண்ணப்பத்திலோ கணக்குகளைத் தொடர்புபடுத்த 'ஜீ' படிவத்தை அனுப்பும்போதோ குறிப்பிடும் பெயர், தேசிய அடையாள அட்டை எண் என்பவற்றை ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் குறிப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர் சேமலாபநிதி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் படிவங்கள் எவை என அறிந்துகொள்ளுங்கள்:

ஏ-- உங்களது சொந்த விபரங்கள் அடங்கிய விபரப்பத்திரம்

பீ - உங்களது உறுப்புரிமைப் பத்திரம்;

சி - தொழில் தருநரால் ஊழியர் கணக்கில் வரவு வைப்புக்காக உதவுத்தொகையைக் குறிப்பிட்டு அனுப்பப்படும் பத்திரம்

டி - தொழில் தருநர் ஒருவரை பதிவுசெய்யும் படிவம்;

ஈ - நீங்கள் சேவையிலிருந்து விலகிவிட்டீர்கள் என்பதனை அறிவிக்கும் உங்களாலும் தொழில் தருநராலும் நிரப்பப்பட வேண்டிய படிவம்;

எப் - ஊழியர் ஒருவர் தமது வேலையிலிருந்து விலகியமை பற்றி அறிவிக்கும் பத்திரம்;

ஜீ - முன்னைய கணக்கொன்றை தற்போதைய கணக்கொன்றுடன் தொடர்புபடுத்தற் பொருட்டு உபயோகிக்கப்படும் படிவம்;

எச் - நிதியில் சேரும்போது உரித்தாளி ஒருவரை நியமனம் செய்யும் படிவம்;

ஐ - நியமனம் ஒன்றை இரத்துச்செய்யும் படிவம்

ஜே - மீள நியமனம் ஒன்றைச் செலுத்த உபயோகிக்கப்படும் படிவம்;

கே - உறுப்பினர் ஒருவர் மீளளிப்பு நன்மைகளைப் பெறுதற்பொருட்டு விண்ணப்பிக்கும் படிவம்

எல் - இறந்த அங்கத்தவரொருவரது நிதியைக் கோரி அவரது உரித்தாளர்கள் விண்ணப்பிக்கும் படிவம்

எம் - சுகவீனம் காரணமாக மீளளிப்பு நன்மைகளைக் கோரும் ஒருவர் 'கே' படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய வைத்திய அறிக்கைப் படிவம்;

என் - வேறு ஒரு சேமலாப நிதியில் உள்ள தொகையை ஊழியர் சேமலாப நிதிக்கு மாற்றும்படி கோரும் விண்ணப்பப் படிவம்;

ஓ - நடைமுறையிலுள்ள வீதத்திலும் பார்க்கக்கூடிய வீதத்திலான உதவுத்தொகையைச் செலுத்துவதற்காக அனுமதிகோரி செய்யும் விண்ணப்பம்;

கிவ் - தவறுதலாகச் செலுத்திய பணத்தை மீளக்கோரும் விண்ணப்பப் படிவம்.

உங்களுக்குத் தேவையான விபரங்கள், அறிவித்தல்கள், விண்ணப்பப்படிவங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள சமீபத்திலுள்ள தொழில் அலுவலகத்தின் உதவித் தொழில் ஆணையாளரையோ அல்லது தொழில் உத்தியோகத்தரையோ சந்தியுங்கள்.

இன்றேல் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளுங்கள்:

பிரதித் தொழில் ஆணையாளர்,
ஊழியர் சேமலாப நிதி,
த. பெ. எண்: 1725
கொழும்பு.

தொலைபேசி எண்: 583966, 582954
பெக்ஸ்: 01-593966

நன்மைகள் மீளளிப்பு விண்ணப்பங்கள் பெற:

தொலைபேசி எண்: 582735, 584467— சாதாரணம்
569704 - மரணக் கோரிக்கை
580767 - திருத்தப்பட்ட கோரிக்கை

ஊழியர் சேமலாப நிதி மீளளிப்பு நன்மைகளுக்கான காசோலை இருப்புத் தொகையை அறிந்துகொள்வது, வீடமைப்புக் கடன் தொடர்பான விபரங்களுக்கு:

அதிகாரி,
ஊழியர் சேமலாப நிதி,
இலங்கை மத்திய வங்கி,
இல. 41, ரேணுகா கட்டிடம்,
ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

அல்லது

அதிகாரி,
ஊழியர் சேமலாப நிதி,
இலங்கை மத்திய வங்கி,
த. பெ. எண்: 1299
கொழும்பு 1.

தொலைபேசி எண்கள்: 338683
333683
347862
344839
338683
344373
329938

பெக்ஸ்: 343191



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004-8-14

L 222115

2004-8-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Arumugam
Bulugala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org